செ. தொ. எண் : 394 15/5/10

**பத்திரிக்கைச் செய்தி**

**ப்ளஸ் 2 தேர்வு முடிவுகள் பதிவு செய்ய 79 மையங்கள் ஏற்பாடு**

**வேலைவாய்ப்புத் துறை தகவல்**

ப்ளஸ் 2 தேர்வு முடிவுகள் 14.05.2010 அன்று வெளியானதைத் தொடர்ந்து 26.05.2010 அன்று மதிப்பெண் பட்டியல்கள் வழங்கப்பட உள்ளதாக கல்வித் துறை தெரிவித்துள்ளது. தமிழகத்தில் 6,82,607 மாணவ, மாணவியர் + 2 தேர்வு எழுதியதில் 5,81,251 பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர். அவர்கள் சான்றிதழ்களைப் பெற்றவுடன் பதிவு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்ட எல்லைக்குட்பட்ட வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் சென்னை மண்டலத்தில் 12 இடங்களிலும், மதுரை மண்டலத்தில் 20 இடங்களிலும், திருச்சி மண்டலத்தில் 26 இடங்களிலும் மற்றும் கோவை மண்டலத்தில் 21 இடங்களிலும் புதிய வேலைவாய்ப்பு பதிவு மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலைவாய்ப்புப் பதிவு மையங்களின் விவரங்கள் குறித்து நாளிதழ்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, மாணவ, மாணவியர்கள் தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள வேலைவாய்ப்புப் பதிவு மையங்களில் தங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம். கூடுதல் தகுதிகளையும் ஆங்காங்கே பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவுக்குச் செல்லும் மாணவர்கள் அசல் குடும்ப அட்டை மற்றும் குடும்ப அட்டையின் நகல், கல்விச் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் மற்றும் ஏற்கனவே 10–ம் வகுப்பு தேர்ச்சியை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் அதற்கான வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையுடன் பதிவு மையங்களை அணுகி தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பதிவு மையங்களில் குடிநீர், பாதுகாப்பு வசதிகள் மாவட்ட ஆட்சியர்களால் செய்து தரப்படும்.

இப்பதிவு மையங்களில் அலுவலக வேலை நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்வதற்காக, முன்தினம் இரவு நேரத்திலிருந்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காத்திருக்க வேண்டியதில்லை. வேலைவாய்ப்புப் பதிவு மையங்கள் அதிக அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், மாணவ, மாணவியர் பொறுமையாக இருந்து அமைதியான முறையில் பதிவு செய்து கொள்ளலாம் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், ஆ.சு.ஜீவரத்தினம் தெரிவித்தார்.

**ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப.,**
**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,**
**கிண்டி, சென்னை.600 032.**

**சென்னை.32**
**14.05.2010.**

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை.